செ.வெ.எண் : 912 நாள் : 05.12.2017

**ஒகி புயலுக்கு முன்பாக ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக சென்று அண்டை மாநிலங்களில் 2,384 மீனவர்கள் இருப்பதாக கண்டறியப்பட்டு, 126 படகுகள் மற்றும் 1,126 மீனவர்களின் விவரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது. மீன்வளத்துறை இயக்குநர் திரு. கோ.தண்டபாணி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் எதிரொலியாக 29.11.2017 நள்ளிரவு கடுமையான சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத கடும் சேதங்கள் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மீதான மீட்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (05.12.2017) மீன்வளத்துறை இயக்குநர் திரு. கோ.தண்டபாணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக 30.11.2017 அன்று வரபெற்ற புகார்களின் அடிப்படையில் 294 மீனவர்கள், 39 படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க சென்று திரும்பவில்லை என்று கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகள் மூலம், தற்போது வரை 19 படகுகள் மீட்கப்பட்டுள்ளன. 294 மீனவர்களில் 229 மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர். மீதமுள்ள 65 மீனவர்கள் மற்றும் 20 படகுகளை கடலோர காவற்படை மற்றும் மீன்வளத்துறை மூலமாக கண்டறிந்து மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களில் மீன்வளத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம், கள ஆய்வு செய்து, புயல் ஏற்பட்ட காலநேரத்தில் கடலுக்கு மீன்பிடிக்க சென்று, கரை திரும்பாத படகுகளின் பதிவு எண், மீனவர்களின் பெயர் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் படகுகளில், 29.11.2017-க்கு முன்பாக கடலுக்கு மீன்பிடிப்பதற்காக 284 படகுகளில் கடலுக்கு சென்றதாக கண்டறியப்பட்டு, அவற்றில் 205 படகுகள் தமிழகத்தின் அருகாமை கடலோர பகுதிகளான கர்நாடகா, மகாராஷ்ட்ரா, குஜராத், இலட்சதீவு ஆகிய பகுதிகளில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு, உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்படகுகளில் 2,384 மீனவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு, மீன்வளத்துறையின் மூலம், அந்தந்த மாநில மீன்வளத்துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு, அந்தந்த மாநிலங்களில் பாதுகாப்பாக உள்ள மீனவர்களின் விவரங்கள், படகு எண் போன்ற அனைத்து விவரங்களையும் பெற்று வருகின்றன. அதனடிப்படையில், இதுவரை 126 படகுகள் மற்றும் 1,126 மீனவர்களின் விவரங்கள் பெறப்பட்டு, உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, இந்திய கடலோர பகுதிகள் மற்றும் அண்டை மாநில கடலோர பகுதிகளிலும் தொடர்ந்து மீனவர்களை தேடும் பணிகளை, அந்தந்த பகுதிகளில் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மீன்வளத்துறை இயக்குநர் திரு. கோ.தண்டபாணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**

Scanned by CamScanner